பக்கங்கள் 19

# காலை முரசு

முழக்கம்: 02 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 23 வெள்ளிக்கிழமை 08.08.2025 அதிர்வு 07



## கடற்கரையில் இளைஞரின் சடலம் மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அச்சுவேலி – அக்கரை கடற்கரையில் இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று கரையொதுங்கியது 03



# மன்னார் காற்றாலை திட்டத்தை இடைநிறுத்துவதற்குத் தீர்மானம்

### மின்சாரத்துறை அமைச்சர் தலைமையிலான கூட்டத்தில் முடிவு

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்குச் சகல தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு காண்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் அபிவிருத்தித் திட்டப் பணிகளை இடைநிறுத்துவதற்கு மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் நடைபெற்ற குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

காற்றாலை மின்னுற்பத்தித் திட்ட 03


# முல்லைத்தீவு - புலிபாய்ந்தகல் கடற்கரையில் சிங்கள மீனவர்கள் தொழில் செய்ய அனுமதி

### திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சத்தம் சந்தடியின்றி பணிப்புரை

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு – புலிபாய்ந்தகல் கடற்கரையில் சிங்கள மீனவர்களுக்குத் தொழில் புரிய அனுமதி வழங்கும்படி கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சத்தம் சந்தடியின்றி – காதும் காதும் வைத்தால் போல் பணிப்புரை வழங்கியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தில் வசிக்கும் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்கள் குளத்து நீர் வற்றுக் காலத்தில் தங்களுக்குப் பாதிப்பு எனக் கூறி கடல் மீன்பிடிக்கு அனுமதி பெற முயற்சி 03






ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நேற்று நாடாளுமன்றத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை தொடர்பில் ஆற்றிய உரையில் அவரது வரிகளுக்கு இடையில் காணப்பட்ட செய்தி குறித்து தென்னிலங்கை வட்டாரங்களில் அதிகம் பேசப்படுகிறது.

அவரது உரையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக சட்டம் விரைவில் பாயும் என்று கோடி காட்டப்பட்டதாக சில விமர்சகர்கள் அர்த்தப்படுத்துகிறார்கள்

அவரது உரையில் பின்வரும் விடயங்கள் கவனத்திற்கு உரியவையாக இருந்தன:-

"யாரும் தங்களின் சொந்த வலைப்பின்னல் அல்லது வட்டத்தின் சக்தி தங்களை சட்டத்தின் பிடியிலிருந்து 03





# அவுஸ்திரேலியா தொடர்ந்தும் இலங்கைக்கு ஆதரவளிக்கும்

## ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் தெரிவிப்பு

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தினார்.

அவுஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான 75 ஆண்டுகளுக்கும் மேலான நட்பை மேலும் வலுப்படுத்துவது குறித்தும், இரு நாடுகளின் பரஸ்பர நன்மைக்காக தற்போதுள்ள ஒத்துழைப்புத் துறைகளை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் தெளிவான தலைமையின் கீழ் வெற்றிகரமான பயணத்திற்கு அவுஸ்திரேலியா தொடர்ந்து ஆதரவை வழங்க தயாராக உள்ளது என்று அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜோய் மோஸ்டின் வலியுறுத்தினார்.

குறிப்பாக இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த தேவையான ஆதரவை வழங்க அவுஸ்திரேலியா தயாராக உள்ளது என்று ஆளுநர் நாயகம் வலியுறுத்தினார்.

சுனாமி பேரழிவு மற்றும் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது அவுஸ்திரேலிய அரசாங்கம் நேரடியாகவும், சர்வதேச நிறுவனங்கள் மூலமாகவும் வழங்கிய ஆதரவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, இந்தப் பயணம் அவுஸ்திரேலியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான நட்பை மேலும் வலுப்படுத்தும் என்று தெரிவித்தார்.


இலங்கையின் பொருளாதாரம், கல்வி, பாதுகாப்பு, சுற்றுலா மற்றும் கடல்சார் விவகாரங்களில் அவுஸ்திரேலியாவிடமிருந்து கிடைத்த ஆதரவையும் இங்கு ஜனாதிபதி பாராட்டினார்.

அதிக எண்ணிக்கையிலான இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் தொழில் பயிற்சிக்கான மையமாக அவுஸ்திரேலியா மாறியுள்ளது என்று கூறிய ஜனாதிபதி, இந்த துறைகளில் அவுஸ்திரேலியாவின் அனுபவங்களிலிருந்து இலங்கை அதிகம் கற்றுக்கொள்ள முடியும் என்றும், அந்த அனுபவங்களை வெற்றிகரமாக பகிர்ந்து கொள்ள இலங்கை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். அவுஸ்திரேலிய முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் மிகவும் சாதகமான சூழல் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அழைப்பின் பேரில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்று முன்தினம் பிற்பகல் இலங்கைக்கு வருகை தந்த அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்ய உள்ளதோடு பண்டாரகம, மிரிஸ்ஸ மற்றும் வெலிகம போன்ற பகுதிகளில் அவுஸ்திரேலியாவின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படும் பல திட்டங்களைக் கண்காணிக்க உள்ளார்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து விலக்களித்துப் பாதுகாக்கும் என்று நம்பக்கூடாது. ஆயினும், இந்த நாட்டில் அத்தகைய மனநிலை சிலருக்கு இருக்கின்றது . சில குடிமக்கள் நீதியை அணுக முடியாத ஒரு நாட்டில், பெரும்பாலும் சட்டத்திற்கு அடிபணிய மறுக்கக்கூடியவர்கள் என்ற எண்ணத்தில் உள்ளனர். எனவே, நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டுமென்றால், சட்டத்தின் ஆட்சியின் மேலாதிக்கத்தை மீண்டும் நாம் நிலைநாட்ட வேண்டும்.

"சட்டத்தின் ஆட்சி முழுமையாக அமல்படுத்தப்படும்போது, ஒரு காலத்தில் தமது சக்திவாய்ந்த வலைப் பின்னல்களுக்குப் பின்னால் உள்ள தங்களை சட்டம் தீண்டாது என்று நம்பியவர்களைக் கூட சட்டம் சென்றடையும். குற்றப் புலனாய்வுத் துறைக்கு எங்கள் முழு ஆதரவையும், லஞ்சம் அல்லது ஊழல் ஆணையத்திற்கு தேவையான வளங்களையும் அதிகாரத்தையும் வழங்கியுள்ளோம். அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய அதிகாரம் பெற்றுள்ளனர். மேலும் சட்டம் இப்போது குற்றவாளிகளைத் தீவிரமாகத் துரத்தி வருகிறது.

"முன்னாள் கடற்படைத் தளபதி ஒருவரை கைது செய்ய நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சிலர் இப்போது ஊடக சந்திப்புகளை நடத்தி, இந்த நடவடிக்கைகள் புலிகள் புலம்பெயர்ந்தோரை திருப்திப்படுத்துவதற்காகவே என்று கூறுகின்றனர். யாரையும் திருப்திப்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை என்பதை நான் தெளிவாகக் கூறுகிறேன். இந்த நாட்டின் குடிமக்களுக்கு சேவை செய்து நீதியை நிலைநாட்ட நாங்கள் முயல்கிறோம்.

"இன்று, குற்றவாளிகள் சட்டம் தங்களுக்குப் பின்னால் வருவதை அறிந்திருக்கிறார்கள். சாட்சியமளிக்க ஒருவரின் தனிப்பட்ட செயலாளர் வரவழைக்கப்படும்போது, என்ன நடக்கிறது என்பதை அவர்கள் சரியாக அறிவார்கள்.

"சட்டம் அவர்களை அடைவதற்கு முன்பு, சிலர் நாட்டில் ஸ்திரமின்மையை உருவாக்க முயற்சிக்கிறார்கள். இது கடந்த காலத்தில் நாம் கண்டது போன்றது. இது சட்ட அமலாக்க அதிகாரிகளை அச்சுறுத்துவதற்கு வழிவகுக்கிறது. நியாயமான விசாரணைகளை வெறுமனே நடத்தியதற்காக அதிகாரிகள் சிறையில் அடைக்கப்பட்ட காலங்கள் நமது வரலாற்றில் உள்ளன. அதிகாரிகளிடையே அச்சத்தை ஏற்படுத்த முயற்சிகள் நடந்து வருகின்றன.

"இருப்பினும், எங்கள் அதிகாரிகளுக்குத் தேவையான தலைமை, தைரியம் மற்றும் அதிகாரத்தை நாங்கள் வழங்கியுள்ளோம். மேலும், தேவைப்படும் போதெல்லாம் அவர்களைப் பாதுகாக்க நாங்கள் முழுமையாக உறுதிபூண்டுள்ளோம். நாங்கள் அரசாங்கத்தில் இருந்தாலும் சரி, அதற்கு வெளியே இருந்தாலும் சரி, இந்த நாட்டில் சட்டத்தை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் செயல்படும் ஒவ்வொரு அதிகாரிக்கும் நாங்கள் துணை நிற்போம். நாங்கள் அதிகாரத்தில் இல்லாவிட்டாலும், பொறுப்புள்ள குடிமக்களாக, நீதி மற்றும் நேர்மைக்கு உறுதியளித்த அந்த அதிகாரிகளை நாங்கள் தொடர்ந்து பாதுகாப்போம் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறோம்." - என்றார் ஜனாதிபதி.

கடந்த 4 ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரத்தியேக செயலாளரான சாண்ட்ரா பெரேரா குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் ஒன்று தொடர்பான விசாரணைக்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தொடர்ந்து, ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த போது அவரின் பணியாள் தொகுதியின் பிரதானியாக இருந்த சாகல ரத்நாயக்க குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்தினம் முன்னிலையாகியிருந்தார்.

இந்தப் பின்புலத்தில்தான் நேற்று நாடாளுமன்றில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து ரணிலை இலக்கு வைத்த ஒன்றா எனக் கேள்விகள் எழுந்துள்ளன.

## முல்லைத்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மேற்கொண்டு வந்தனர்.

அதற்காக அவர்களுக்கு அனுமதி வழங்கும் பணிப்புரைக் கடிதம் நேற்று முன்தினம் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் பணிப்பாளரால் ஒப்பமிடப்பட்டு மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரதி வெலிஓயா கிராமப்புற மீனவர் அமைப்பின் தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்த வெலிஓயா கிராமப்புற மீனவர் அமைப்பினரே வெலிஓயாவில் உள்ள குளங்களின் வற்றுக் காலத்தில் அனுமதியின்றி – அத்துமீறிய வகையில் – தண்ணிமுறிப்புக் குளத்தில் மீன்பிடியில் ஈடுபட முயலுகின்றனர் என்பதும் –

அந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்கனவே தண்ணிமுறிப்புக் குளத்தில் அனுமதியுடன் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் அவர்களுடன் முரண்படும் நிலைமைகள் ஏற்படுகின்றன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது.

இவ்வாறு தண்ணிமுறிப்பில் ஏற்படும் பிரச்சினையைக் காரணம் காண்பித்து வெலிஓயாவில் வசிக்கும் சிங்கள மீனவர்களுக்கு 15 மைல் தொலைவில் உள்ள தமிழ் மீனவர்களின் பிரதேசத்தில் கடற்றொழிலுக்கு அனுமதி வழங்கப்பட்டமை திட்டமிட்ட இன முரண்பாட்டைத் தோற்றுவிக்கும் என உள்ளூர் மீனவர்கள் குறிப்பிடுகின்றனர்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரம் தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி தலைமையில் விசேட பேச்சில் ஈடுபடுபதற்கும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் மற்றும் இல்மனைட் கனிய வளம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை விசேட கலந்துரையாடல் மின்சாரத்துறை அமைச்சர் அருண கருணாதிலக தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வன்னி மாவட்ட பிரதிநிதிகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உட்பட பல்வேறு தரப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தின் போது மன்னார் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்தால் மன்னார் மாவட்ட மனித மற்றும் இயற்கை வாழிடங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விரிவாக ஆராயப்பட்டது. திட்டத்தின் ஆரம்பப் பணிகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மன்னார் மாவட்ட சிவில் பிரஜைகள் இதன்போது எடுத்துரைத்தனர்.

காற்றாலை மின்னுற்பத்தித் திட்டம் குறித்து சகல தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கும், அதுவரையில் இந்தத் திட்டப் பணிகளை இடைநிறுத்துவதற்கும் மின்சாரத்துறை அமைச்சர் தலைமையில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இந்த விடயம் குறித்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் விசேட கலந்துரையாடலில் ஈடுபடுவதற்கும் இதன்போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

மின்னுற்பத்தித் திட்டப் பணிகளுக்கான பொருத்தல் உபகரணங்களை மன்னார் தீவுக்குள் கொண்டு செல்லாமல் அவற்றைப் பிறிதொரு இடத்தில் பாதுகாப்பாக வைப்பற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு இதன் போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

## கடற்கரையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடமராட்சி – கரணவாயைச் சேர்ந்த இளைஞரின் சடலமே நேற்று வியாழக்கிழமை மாலை இவ்வாறு கரையொதுங்கியது.

மீட்கப்பட்ட சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூராய்வு பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# மன்னார் பிரச்சினை

மன்னார் காற்றாலை மின் திட்டம் பெரும் சர்ச்சையாக உருவெடுத்துள்ள சூழ்நிலையில் அதை தற்காலிகமாக நிறுத்த முடிவெடுக்கப்பட்டு இருப்பதாக இப்போது கூறப்படுகிறது.

ஆயினும், அந்த முடிவில் அரசு நேர்மையாக இருக்குமா என்பது கேள்விக்குறியே. ஏனெனில் இவ் விடயத்தில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் கடந்த கால வாக்குறுதி அத்தகையதாகத்தான் - காற்றில் பறக்க விடப்படுவதாகத்தான் - இருந்து வந்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் மன்னாருக்கு வந்து, மக்கள் மத்தியில் உரையாற்றிய அநுரகுமார திஸநாயக்க, மன்னார் மக்களின் இணக்கமின்றி இத்தகைய திட்டம் எதுவும் முன்னெடுக்கப்பட மாட்டாது என்று மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தார். அந்த வாக்குறுதியுடன்தான் அவர் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தார்.

ஆனால் அவரது அரசு மன்னார் மக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில், காற்றாலை மின் திட்டம், கனிய மணல் அகழ்வு என்று பல்வேறு திட்டங்களை தன்பாட்டில் முன்னெடுக்க முயற்சித்து வருகின்றது.

அதன் ஒரு கட்டமாக காற்றாலை மின் திட்ட பணிகளுக்கான பாரிய பொருத்தல் உபகரணங்கள், கருவிகள் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. அதனை அடுத்து மன்னார் மக்களும், மக்கள் பிரதிநிதிகளும், சமூக அமைப்புகளும் கிளர்ந்து எழுந்துள்ள நிலையில், இப்போது இந்தப் பிரச்சினைக்கு சகல தரப்பினருடனும் கலந்துரையாடி ஒரு தீர்வு தீர்வு காண்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதுவரையில் அபிவிருத்தி திட்ட பணிகளை இடைநிறுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

காற்றாலை மின்திட்ட விவகாரம் தொடர்பில் இன்னும் இரண்டு வாரங்களுக்குப் பின்னர் ஜனாதிபதி தலைமையில் விசேட பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மன்னார் காற்றாலை திட்டம் மற்றும் இல்மனைட் கனிய வளம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை குறித்து நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று வியாழக்கிழமை விசேட கலந்துரையாடல் மின்சாரத் துறை அமைச்சர் அருண கருணாதிலக தலைமையில் இடம்பெற்றபோதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த கலந்துரையாடலில் தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகள், சிவில் சமூக பிரதிநிதிகள் மற்றும் மன்னார் மாவட்ட பிரஜைகள் குழு உட்பட பல்வேறு தரப்பினர் கலந்துக்கொண்டுள்ளனர்.

இச்சந்தர்ப்பத்தின் போது மன்னார் காற்றாலை மின்திட்டத்தால் மன்னார் மாவட்ட மனித மற்றும் இயற்கை வாழிடங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து விரிவாக விளக்கப்பட்டுள்ளது. திட்டத்தின் ஆரம்ப பணிகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை மன்னார் மாவட்ட சிவில் பிரஜைகள் இதன்போது எடுத்துரைத்துள்ளனர்.

காற்றாலை மின்திட்டம் குறித்து சகல தரப்பினருடன் கலந்துரையாடி ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கும், அதுவரையில் இத்திட்ட பணிகளை இடைநிறுத்துவதற்கும் மின்சாரத் துறை அமைச்சர் தலைமையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அந்த இணக்கப்பாடு நேர்மைத்தனத்துடன் கடைப்பிடிக்கப்படுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி. முன்னர் ஜனாதிபதி மன்னார் மக்களுக்கு அளித்த வாக்குறுதி போல இந்த உறுதிப்பாடும் காற்றில் கரைந்து போகாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.



# குஷ் போதைப்பொருளுடன் இந்தியப் பிரஜைகள் கைது

12 கிலோ கிராமிற்கும் அதிக குஷ் போதைப்பொருளுடன் 03 இந்திய பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

22, 43 வயதுடைய 02 பெண்கள் மற்றும் 42 வயதான ஆண் ஆகியோரே போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# விபத்தில் காயம் அடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

யாழ். அராலி மத்தி செல்லமணி கடையடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த வயோதிபர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அராலி மத்தி, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தையா ஜெயரட்ணம் (வயது 74) என்ற வயோதிபராவார்.

மேற்படி வயோதிபர் கடந்த 1 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மிளகாய் தூள் அரைத்துக் கொண்டு சைக்கிளில் வட்டுக்கோட்டையில் இருந்து அராலி நோக்கி சென்று கொண்டிருந்தபோது பின் திசையில் வந்த மோட்டார் சைக்கிள் அவரை மோதி தள்ளியது. இதில் மயக்கம் அடைந்த நிலையில் கொட்டக்காடு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு இருந்த நிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை வட்டுக்கோட்டை பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# 11 இந்திய பிரஜைகளை நாடு கடத்த உத்தரவு

மடிக்கணினி உள்ளிட்ட உபகரணங்களுடன் அக்குரேகொட பகுதியில் கைது செய்யப்பட்ட 11 இந்திய பிரஜைகளையும் நாடு கடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் அனைவரும் கடுவெல நீதவான் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

விமானப்படையின் புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த தகவலுக்கமைய, அக்குரேகொட பகுதியில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த நிலையில் கடந்த 4 ஆம் திகதி மேற்படி 11 பேரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.



கைது செய்யப்பட்டவர்களில் 03 பெண்களும் அடங்குகின்றனர்.

இணையத்தளம் வழியாக சூதாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.




# சுற்றுலாத்துறைக்கு ஆறு மாதங்களில் 1.7 பில்லியன் டொலர் வருமானம்

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் இலங்கையின் சுற்றுலாத்துறை ஈட்டிய வருமானம் 1.7 பில்லியன் டொலர் என தெரியவந்துள்ளது.

இந்த ஆண்டு இதுவரையில், இலங்கைக்கு 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர் எனவும் இதன் மூலம் கடந்த 6 மாதங்களில் அரசாங்கம் 3.7 பில்லியன் டொலர் வருமானத்தை ஈட்டியுள்ளதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருந்தார்.

ஆனால், இதுகுறித்து ஆராயும் விதமாக FactSeeker> இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் மாதாந்த அறிக்கைகளை ஆய்வு செய்தபோது, இந்த ஆண்டு ஜூன் மாதம்வரை 1.3 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர் என தெரியவந்துள்ளது.

அதன்படி, 2025 ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் இலங்கையின் சுற்றுலாத்துறை ஈட்டிய வருமானம் 1.7 பில்லியன் டொலர் என்பதும் தெரியவந்துள்ளது.




# மீண்டும் சேவையை ஆரம்பிக்கும் ஆர்கியா இஸ்ரேலிய ஏர்லைன்ஸ்

இலங்கைக்கான விமான சேவை, மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக, ஆர்கியா இஸ்ரேலிய ஏர்லைன்ஸ் வரையறுக்கப்பட்ட விமான சேவை நிறுவனம் அறிவித்துள்ளது.

இதன்படி, இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் இருந்து கொழும்புக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 23 ஆம் திகதி, ஆர்கியா இஸ்ரேலிய ஏர்லைன்ஸ், தமது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் வாராந்தம் விமான சேவையைமுன்னெடுக்கவுள்ளதாகவும், அதற்கான அட்டவணை வெளியிடப் படுமெனவும் ஆர்கியா இஸ்ரேலிய ஏர்லைன்ஸ் வரையறுக்கப்பட்ட விமான சேவை நிறுவனம் தெரிவித்துள் ளது.

# மன்னார் மாவட்ட மக்கள் எவரும் ஏற்காத காற்றாலைத் திட்டத்தை உடன் நிறுத்துக!

## நேற்றைய கலந்துரையாடலில் ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(பா.சதீசன்)

கடந்த யுத்த காலத்தில் அரசால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள், அரச படைகள் குண்டுவீசி தாக்குதல் மேற்கொண்ட நிலையைப் போல், கடந்தகால அமைச்சரவை அனுமதியளித்த இந்தக் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்தை மன்னார் தீவினுள் மேற்கொள்வதற்கு இடமளித்தால் மன்னார் தீவின் நிலை மிக மோசமாகப் பாதிக்கப்படும் என மக்கள் அஞ்சுகின்றனர் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார். எனவே, மன்னார் மாவட்டம், மக்கள் ஏற்றுக் கொள்ளாத இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.



நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற மன்னார் தீவு காற்றாலை மின்னுற்பத்தித் திட்டப் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் போதே ரவிகரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்த விவகாரத்தைப் பொறுத்த வரையில் காற்றாலை மின்னுற்பத்தித் திட்டத்தின் மீது மன்னார் மக்களுக்கோ, மன்னாரைச் சார்ந்த பொது அமைப்புக்களுக்கோ எந்த வெறுப்புக்களும் கிடையாது.

பாதிப்புக்கள் ஏற்படும் என்பதாலேயே மன்னார் தீவினுள் இந்தக் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைக்கவேண்டாமென மன்னார் மக்களும், பொது அமைப்புக்களும் கோருகின்றன.

இருப்பினும் பாதிப்புக்கள் எவையும் ஏற்படாதென்ற அடிப்படையில் மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைப்பதற்கு கடந்த கால அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனினும் மக்களுக்கு அதன் மீது நம்பிக்கையில்லை. மன்னார் தீவினுள் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்கள் அமைக்கப்பட்டால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என்பது மக்களுடைய நிலைப் பாடாக இருக்கின்றது.

குறிப்பாக கடந்த யுத்த காலத்தில் அரசால் பாதுகாப்பு வலயம் என ஒரு பகுதி அறிவிப்புச் செய்யப்படும். அவ்வாறு அரசால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட பகுதிக்குள் எமது மக்கள் நம்பி தஞ்சம் புகும்போது, அரச படைகளால் குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு எமது அப்பாவித் தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இவ்வாறான பல சம்பவங்கள் கடந்த காலத்தில் இடம்பெற்றன. இவ்வாறான சம்பவங்களால் அரசுகள் மீது எமது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர்.

இதனைப் போலவே மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்தி கோபுரங்கள் அமைப்பதற்குப் பாதிப்பு இல்லையெனக் கடந்த கால அரசின் அமைச்சரவையால் அனுமதி வழங்கப்பட்டாலும், அதன் மீது எமது மக்களுக்கு நம்பிக்கையில்லை. மன்னார் தீவில் இந்தத் திட்டத்தை அமுல்படுத்தினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்படும் என்ற ஐயப்பாடு அந்த மக்களுக்கு இருக்கின்றது.

இதேவேளை, மன்னார் தீவில் காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களை அமைக்கும் நோக்கில், வாகனங்களில் எடுத்துவரப்பட்ட காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரங்களின் பாகங்கள் தள்ளாடிப் பகுதியில் வைத்து மன்னார் மக்களால் வழிமறிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறாக இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு மக்களால் தடுத்துவைக்கப்பட்டிருந்த காற்றாலை மின்னுற்பத்திக் கோபுரத்தின் பாகங்கள் பலத்த பொலிஸ் பாதுகாப்புடன், மக்களின் எதிர்ப்பையும் மீறி மன்னார் தீவுக்குள் அடாவடித்தனமாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இந்த விடயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

மக்கள் விரும்பாத ஒரு திட்டத்தை ஒருபோதும் அத்துமீறித் திணிக்க முடியாது. அரசு என்பது மக்களுக்காக இருக்க வேண்டுமே தவிர, மக்கள் விருப்பாத ஒன்றை அத்துமீறித் திணிப்பதாக இருக்கக்கூடாது.

எனவே, மக்கள் ஏற்றுக்கொள்ளாத இந்தத் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.” – என்றார்.

# இலங்கையில் 1000 இற்கும் மேல் சிறப்பு மருத்துவர்கள் பற்றாக்குறை

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

இலங்கையில் 1,139 சிறப்பு மருத்துவர்களின் பற்றாக்குறை இருப்பதாகச் சுகாதார அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சிறப்பு மருத்துவர்களின் சேவைகள் கிடைக்க வேண்டிய 134 இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் சிறப்பு பராமரிப்பு மருத்துவமனைகளில் 2042 சிறப்பு மருத்துவர்கள் மட்டுமே உள்ளனர் என்று அவர் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.



நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீரவின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், ஓய்வு, ராஜினாமா மற்றும் சேவையிலிருந்து வெளியேறுதல் போன்ற பல்வேறு காரணங்களால் நாடு, 570 சிறப்பு மருத்துவர்களின் சேவைகளை இழந்துள்ளதாகக் கூறினார்.

2020 முதல் 2024 வரை 233 சிறப்பு மருத்துவர்கள் ஓய்வு பெற்றுள்ளனர், 82 பேர் சேவையை விட்டு வெளியேறியுள்ளனர்.

7 பேர் ராஜினாமா செய்துள்ளனர், 57 பேர் பல்வேறு தேவைகளுக்காக வேறு நிறுவனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் 191 சிறப்பு மருத்துவர்கள் சம்பளமில்லா விடுப்பில் சென்றுள்ளனர் என்று அவர் கூறினார்.

தற்போதுள்ள சிறப்பு மருத்துவர்களில் 201 பேர், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும், 546 பேர் 55 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

# மஸ்கெலியாவில் குடும்பஸ்தர் மாயம்











(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

மஸ்கெலியா, புரவுன்லோ பகுதியே சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையைக் காணவில்லை என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு தேடப்பட்டு வந்த நிலையில் அவரணிந்திருந்த ஆடை மற்றும் பாதணிகள் மவுசாகலை ஆற்றின் கரையோரத்தில் காணப்பட்டமையை அடுத்து ஆற்றில் தேடும் பணி இடம்பெற்று வருகிறது.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுன்லோ பகுதியை சேர்ந்த வேலு மருதமுத்து (வயது55) என்ற நபரை நேற்று முன்தினம் காலை முதல் காணவில்லை என மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்படுள்ளது.

இந் நிலையில் நேற்று பிரதேச மக்கள் தேடும் பணியில் ஈடுட்டபோது நீர்தேக்கக் கரையோரத்தில் அந்த நபர் அணிந்திருந்ததாகக் கூறப்படும் ஆடை, தொப்பி மற்றும் காலணிகள் கிடப்பதை கண்ட பிரதேச மக்கள் சந்தேகத்தில் மவுசாகலை நன்நீர் மீன் பிடி தொழிலாளர்களின் உதவியுடன் ஆற்றில் தேடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் ஆடைகள் கிடந்த இடத்தில் EPF என்றும் மண்ணில் எழுத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது

# பிணையில் விடுவிக்கப்பட்ட 3 பேரை மீள விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(மஸ்கெலியா நிருபர்)

மனநலம் பாதிக்கப்பட்ட நபரை கடுமையாகத் தாக்கிக் காயப்படுத்திய குற்றசாட்டில் மஸ்கெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பதில் நீதிவானால் தலா ஐந்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் கடந்த 3 ஆம் திகதி விடுவிக்கபட்ட மூன்று வர்த்தகர்க நேற்று முன்தினம் ஹட்டன் நீதிவான் பரீட்டீன் முன்னிலையில் ஆஜராகிய சமயம் அவர்களை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 30.07.2025 அன்று சாமிமலை நகரில் துரைராஜ் சண்முகநாதன் என்ற கவரவலைஒ பகுதியை சேர்ந்த மனநலம் பாதிக்கப்பட்ட நபரை கடுமையாக மூன்று வர்த்தகர்கள் தாக்கியுள்ளனர்.

இதன் பின்னர் இவர் மஸ்கெலியா மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல பட்டு, அங்கு இருந்து கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று மீண்டும் டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றம் செய்து தற்போது சிகிச்சை பெற்று மீண்டும் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

இவர் மீது தாக்குதல் நடத்தி காயப்படுத்தியவர்கள் என்று கூறப்படும் மூன்று சந்தேக நபர்கள் மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புரையில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மூவருன் ஹட்டன் நீதிமன்றில் கடந்த 3ஆம் திகதி ஆஜர்படுத்தப்பட்ட வேளையில் பதில் நீதிவான் மூவரையும் தலா ஐந்து லட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்து நேற்று முன்தினம் 6 ஆம் திகதி மீண்டும் மன்றில் ஆஜராக உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதன் படி இன்று நேற்று முன்தினம் மூன்று சந்தேக நபர்களும் ஹட்டன் நீதி மன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

வாதி, பிரதிவாதிகளின் சட்டத்தரணிகளின் வாதங்கள் முடிய நீதிவான் சந்தேக நபர்களை எதிர் வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார்.

# 500 போதை மாத்திரைகளுடன் சுன்னாகத்தில் இளைஞர் கைது

யாழ். சுன்னாகம் பகுதியில் ஐந்நூறு போதை மாத்திரைகளுடன் 25 வயது இளைஞர் ஒருவரை சுன்னாகம் பொலிஸார் நேற்றிரவு கைது செய்தனர்.

யாழ் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் சுன்னாகம் விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவினரால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

போதைமாத்திரைகளை விற்பனைக்கு இளைஞர் ஒருவர் சுன்னாகம் நகர்பகுதிக்கு எடுத்து வருகின்றார் என அந்தப் பிரிவினருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைவாக சம்பவ இடத்திற்கு விரைந்த பிரிவினர் 500 போதை மாத்திரைகளைக் கைப்பற்றினர். அவற்றை எடுத்து வந்த சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இளைஞர் ஒருவரையும் கைது செய்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.














# சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வு வேண்டி நேற்று மாந்தை மேற்கு அந்தோனியார்புரத்தில் கவனவீர்ப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இணைந்த வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி முறையில் அதிகாரப் பகிர்வு வேண்டி வடக்கு – கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் 100 நாள் செயல் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், நேற்றைய தினம் மன்னார் மாவட்டம் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள அந்தோனியார்புரம் கிராமத்தில் சமஷ்டித் தீர்வை வலியுறுத்தி கவனவீர்ப்பு ஒன்று மெசிடோ நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தலில் முன்னெடுக்கப்பட்டது.

இணைந்த வடக்கு – கிழக்கு மாகாணங்களுக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு மக்களை அணிதிரட்டும் வகையில் இந்தச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 3 வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வரும் நூறு நாள் செயல்திட்டத்தில் முதல் நாள் நிகழ்வு கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து நூறு நாள் செயல் திட்டம் வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றைய தினம் வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அந்தோனியார்புரம் கிராமத்தில் அது முன்னெடுக்கப்பட்டது.

இந்தஜ் கவனவீர்ப்பு நிகழ்வில் அப்பகுதி மக்கள் பதாகைகளை ஏந்தியவாறு பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்துக் கலந்து கொண்டனர்.











## பொத்துவில் - பொலிகண்டி பேரணி

# மல்லாவி மக்களுக்கு எதிரான வழக்குத் தவணை ஒக்.29 இல்



பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான நடை பயணப் போராட்டத்தில் கலந்துகொண்ட மல்லாவி வர்த்தகர்கள், மல்லாவி இளைஞர்கள் உள்ளிட்ட 19 பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

மாங்குளம் நீதிமன்றத்தில் வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிராளிகள் சார்பில் சட்டத்தரணி எஸ்.வி.தனஞ்சயன் உட்பட மூன்று சட்டத்தரணிகள் முன்னிலையாகியிருந்தனர்.

இதுவொரு அமைதிப் பேரணி என்ற விடயத்தை அவர்கள் மன்றுரைத்தனர். சமர்ப்பணங்களைக் கேட்டறிந்த மன்று, வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதிக்குத் தவணையிட்டது.




# யாழிலும் மட்டக்களப்பிலும் 30 ஆம் திகதி பேரணிகள்!

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினத்தன்று

செம்மணி மனித புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்படும் உடல்கள் தொடர்பான சர்வதேச விசாரணை வேண்டும் என நாம் கோரும் அதேவேளை, உள்ளக விசாரணையை திணிக்கும் அரச தலைவரைக் கண்டித்தும் பாரிய கண்டனப் பேரணியை எதிர்வரும் 30 ஆம் திகதி நடத்தவுள்ளோம் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் செயலாளர் சிவானந்தன் ஜெனிற்றா தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினம் தொடர்பாக யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் சர்வதேச தினமாகும். இத்தினத்தில் வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும், கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலும் மாபெரும் கவனவீர்ப்பு பேரணிகளை நடாத்த உள்ளோம்.

வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் சர்வதேச நீதிகோரி தொடர்ச்சியாகப் போராடி வருகின்றோம். ஆயுத மௌனிப்புடன் 2009 ஆம் ஆண்டு யுத்தமானது மிகப் பெரும் இனவழிப்பின் ஊடாக முடிவுறுத்தப்பட்டது. முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்கு முன்னரும் அதன் பின்னரும் சிறுவர்கள், பெண்கள் உட்பட பலர் வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்பும், செம்மணி மனிதபுதைகுழி உட்பட பல மனித புதைக்குழிகளும், சித்திரவதை முகாம்கள் ஆகியவை இனப்படுகொலைக்கான முக்கிய ஆதாரங்களாக எம் கண் முன் நிலைத்து நிற்கின்றன. இவை அனைத்தும் சர்வதேச விசாரணை ஒன்றின் கீழ் முறையாக விரைந்து விசாரிக்கப்பட வேண்டும். சர்வதேச நீதி விசாரணை காலதாமதமின்றி நடத்தப்படவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பத்தினர் பெற வேண்டிய உண்மையான நீதியும், அவர்களது பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் சர்வதேச சமூகத்தின் செயற்பாடுகள் இன்றியமையாதவையாகும்.

அந்த வகையில் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடரில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும்படியும், அனைத்து நாடுகளும் ஒருமித்து இலங்கைக்கு எதிராக வாக்களிக்குமாறும் மனித உரிமைகளை பேணும் அனைத்து நாடுகளிடமும் கோருகின்றோம்.

செம்மணி மனித புதைகுழி அகழ்வில் கண்டெடுக்கப்படும் உடல்கள் தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என நாம் கோரும் அதேவேளை, உள்ளக விசாரணையை திணிக்கும் அரச தலைவரைக் கண்டித்தும் பாரிய கண்டன பேரணியை எதிர்வரும் 30ம் திகதி நடாத்த உள்ளோம்.

பேரணி கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு கல்லடி பாலத்தில் இருந்து காந்தி பூங்கா வரையும், வடமாகாணத்தில் சங்கிலியன் நினைவிடத்தில் தொடங்கி செம்மணி வரையும் நடைபெறவுள்ளது.

எனவே இப் பேரணியில் மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் குடும்பத்தினர்கள், மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தன்னார்வலர்கள், தொழிலாளர் சங்கங்கள், கிராமிய அமைப்புகள் மற்றும் பொது மக்கள் அனைவரையும் இணையுமாறு அழைக்கின்றோம் - என்றார்.



# ‘திசைகாட்டி’ அரசாங்கத்தின் சதி வலைக்குள் மலையக இளைஞர், யுவதிகள் சிக்கக்கூடாது!

## மலையக அரசியல் அரங்கத்தின் தலைவர் திலகராஜ் எச்சரிக்கை

மலையக இளைஞர், யுவதிகளை மாற்றுத் திசைகளில் பயணிக்கச் சிந்திக்கச் செய்யும் வகையிலான “திசைகாட்டி” அரசின் தீர்மானம் கண்டிக்கத்தக்கது என்று மலையக அரசியல் அரங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அரசியல் செயற்பாட்டாளருமான மயில் வாகனம் திலகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“மலையகத் தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு என்பது அரசியல் அதிகாரப் பதிவு, நிர்வாக அதிகாரப் பகிர்வு எனும் இரண்டு தளங்களில் தனியாகச் சிந்திக்கப்பட வேண்டியது எனும் ஆழமான பார்வையின் அடிப்படையில் பிரதேச சபை எண்ணிக்கை அதிகரிப்பு, பிரதேச செயலக எண்ணிக்கை அதிகரிப்பு முதலான விடயங்களை முன்னிறுத்தியதாக என்னைப் போன்றவர்களின் அரசியல் செயற்பாடுகள் அமைந்தன, அமைகின்றன.

இதில் இன்னொரு முக்கிய அம்சம் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது. தோட்ட நிர்வாகமே பொது நிர்வாகத்தையும் பார்க்க வேண்டும் எனும் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடாத்திய இலங்கை அரசு மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கு “அரச கிராம சேவகர் சேவகர் பிரிவுகளை வழங்கி இருக்கவில்லை (பின்னர் எப்படி உள்வாங்கப்பட்டது இப்போது எப்படி இயங்குகிறது என்பதைத் தனியாகவும் விரிவாகவும் விளக்க முடியும்).

இந்த நிலையில் “கிராம சேவகர் பிரிவுகளுக்கு” அமைவாக மாத்திரம் அன்றி அதற்கு வெளியேயும் இளைஞர் கழகங்களைப் பதிவு செய்ய முடியும் எனும் வாய்ப்பு இருந்ததால் மலையக இளைஞர், யுவதிகள் அதில் பங்கேற்று தமது வாய்ப்புகளை வளப்படுத்திக் கொண்டனர்.

பாடசாலை கல்வி முடித்த கையோடு பல்கலைக் கழகம் செல்வதற்கு முன்னர் இளைஞர் கழகம் சார்பில் மாவட்ட மட்டத்தில் கவிதைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், தேசிய மட்டத்தில் பேச்சுப் போட்டியில் முதலாம் இடத்தையும் (1995) பெற்றமை என்னைப் போன்றவர்களுக்குப் பெரும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தியது. பின்னாளில் நாடாளுமன்றம் சென்று பயமின்றி பேசும், இலக்கிய களங்களில் இறங்கிச் செயற்படும் ஊக்கத்தை எமக்குத் தந்தது.

இப்போதைய தேசிய மக்கள் சக்தி அரசு ஒரு கிராம சேவகர் பிரிவுக்கு ஒன்று எனும் முறையில் இளைஞர் கழகங்களை அமைக்கும் வகையிலான சுற்று நிருப்பத்தை வெளியிட்டதால் ஆயிரக்கணக்கான மலையக இளைஞர், யுவதிகள் தேசிய நீரோட்டத்தில் இருந்து விலக்கப்பட்டுகின்றனர்.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக முதலாளித்துவ அரசுகள் என இவர்களால் வர்ணிக்கப்படுபவர்களால் வழங்கப்பட்டு வந்த வாய்ப்பை முற்போக்கு இடதுசாரிகள் எனக் காட்டும் அரசு தட்டிப் பறிப்பது அசிங்கமானது மட்டுமல்ல ஆபத்தானதும் கூட.

உடனடி தீர்வாக இந்தப் புதிய சுற்றுநிருபத்தை மீளப்பெறுவதும் முன்னைய அரசுகளில் செயற்படுத்தப்பட்ட அந்த சுற்றுநிருபத்தைச் செயற்படுத்துவதும் அவசியமானது.

அடுத்த கட்டமாக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளில் கிராம சேவகர் பிரிவுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் தீர்மானத்தை எடுப்பதும் (நல்லாட்சி காலத்தில் பிரதேச சபை, பிரதேச செயலகம் அமைக்கப்பட்டது போல்) தேசிய மக்கள் சக்தி அரசின் நடவடிக்கைகளாக அமைய வேண்டும்.

மலையக இளைஞர், யுவதிகள் இந்தச் சுற்றுநிருப சிக்கலுக்குள் மாத்திரம் சிந்தித்து தமது போராட்டத்தை வரையறுத்துக் கொள்ளாமல் அதற்குக் காரணமாக அமைந்த நிர்வாக அதிகாரப் பகிர்வான கிராம சேவகர் பிரிவுகளை அதிகரிக்கக் கோரும் போராட்டத்தை நாடு தழுவிய ரீதியில் (பிரதேச செயலக போராட்டத்தை மலையக அரசியல் அரங்கம் முன்னெடுத்தது போல்) முன்னெடுக்கத் தயாராக வேண்டும். அது ஜனநாயகப் போராட்டமாக அமைதல் வேண்டும்.” – என்றுள்ளது.



# துப்பாக்கிச் சூட்டில் ஐந்து பேர் படுகாயம்

பொரளை – சஹஸ்புர பகுதியில் நேற்று துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தில் ஐவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.







# மீண்டும் தமிழரசு வசமானது ஆரையம்பதி பிரதேச சபை!

## புதிய தவிசாளராக செந்தில்குமார் தெரிவு

மட்டக்களப்பு, மண்முனைப்பற்று – ஆரையம்பதி பிரதேச சபை மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வசமானது. புதிய தவிசாளராக அந்தக் கட்சியைச் சேர்ந்த காத்தலிங்கம் செந்தில்குமார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி மற்றும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் பிரசன்னத்தில் சபை மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. இதன்போது புதிய தவிசாளருக்கான முன்மொழிவை உள்ளூராட்சி ஆணையாளர் கோரினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆரையம்பதி பிரதேச சபையின் உப தவிசாளர் காத்தலிங்கம் செந்தில்குமார் தவிசாளர் பதவிக்கு முன்மொழியப்பட்டார். தவிசாளருக்கான வேறு தெரிவுகள் இன்மையால் ஆரையம்பதி பிரதேச சபையின் தவிசாளராக கா.செந்தில்குமார் ஏகமனதாகத் தெரிவு செய்ப்பட்டார்.

பிரதேச சபையின் உப தவிசாளருக்கான பதவியானது தற்போது வறிதாக்கப்பட்டுள்ளமையால், மீண்டும் குறித்த பதவிக்கான வெற்றிடம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் என்று கிழக்கு உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

முன்னர் தெரிவு செய்யப்பட்ட தவிசாளர் த.மாணிக்கராஜா அண்மையில் காலமாகியதன் காரணமாக இந்தப் புதிய தவிசாளர் தெரிவு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் புதிய தவிசாளர் தெரிவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்யின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.









# இன்று வரலக்ஷ்மிவிரதம்!

வரலட்சுமிட் விரதம் என அழைக்கப்படும் இவ் விரதத்தை திருமணமாகி சுமங்கலியாக வாழும் சுமங்கலிப் பெண்களும், கன்னிப் பெண்களும் மகாவிஷ்ணுவின் தேவியான இலட்சுமி தேவியைக் குறித்து அனுஷ்டிக்கும் மிகச் சிறப்பான விரதமாகும். இதை யார் வேண்டுமானாலும் செய்ய முடியாது. திருமணமான பெண்கள், ஒரு குரு முகமாக எடுத்துக் கொண்டே செய்ய வேண்டும். க்ருஹ லக்ஷ்மியான மருமகள், திருமணமான முதல் வருடத்தில் தீச்சை பெற்றுக் கொள்வதால் எந்த தமிழ் மாதத்தில் வரலக்ஷ்மிவிரதம் வந்தாலும் அனுஷ்டிக்கலாம். இல்லை என்றால், எந்த வருடத்தில் ஆவணி மாதத்தில் வருகிறதோ அப்போதுதான் கடைப்பிடிக்க முடியும்.

சாதாரணமாக, நீண்ட வருடங்களாக பூஜை செய்து வரும், இவ்விரதத்தின் தாத்பரியம் நன்கு அறிந்த ஒரு பெண்ணையே குருவாக வரித்துத் அவர் வந்து பூஜை எப்படி செய்ய வேண்டும் என்று சொல்லப்படுகிறது. சிறிதளவும் பிசகாமல் ஒவ்வொரு வருடமும் செய்ய வேண்டும். தீட்சை பெற்றுக் கொண்ட பிறகு வாழ்நாள் முழுதும் செய்யும் வரலக்ஷ்மி விரதம் ஏதாவது தவிர்க்க முடியாத காரணத்தால் செய்யமுடியாது போனால், அடுத்த வெள்ளிக்கிழமை செய்யலாம்.

ஆடி மாத பௌர்ணமிர்க்கு முன்வரும் வெள் ளிக்கிழமையில் வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிக் கப்படுகிறது. இந்த விரதம் வெள்ளிக்கிழமை நாட்களில் அமைந்தால் அம்பிகை அருள் பூரணமாக நிறைந்த நாளாகக் கொள்ளப்படுகின்றது.

சகல சௌ பாக்கியங்களையும் தரும் லக்ஷ்மியை (அஷ்டலக்ஷ்மியை) வணங்குவதால் வரலக்ஷ்மி விரதம் (வரம் தரும் லக்ஷ்மி விரதம்) என்றழைக்கப் பெறுகின்றது. மிகவும் பக்தி சிரத்தை யோடும், மடியோடும் இந் நாளில் நோன்பிருந்து வழிபட்டால் சகல சௌ பாக்கியங்களும் பெற்று சுமங்கலியாக வாழலாம் என்பது ஐதீகம்.

இவ் விரதத்தை நியம விதிப்படி வீட்டில் அனுஷ்டிப்பதால் இலக்குமிதேவி வீட்டில் வாசம் செய்வாள். இயலாதவர்கள் ஆலயங்களிலும் இவ் விரதத்தை அனுஷ்டிக்கலாம்.

இந்த விரதத்தை அனுஷ்டிப்பதால், இல்லத்தில் செல்வம் கொழித்துக் களித்தோங்கும். கணவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வதால் மனைவியர் தீர்க்க சுமங்கலியாக வாழும் பாக்கியம் கிடைக்கப் பெறுகின்றனர்.

அத்துடன் பிள்ளைப் பேறு இல்லாதவர்கள் "பாக்கிய இலட்சுமியின்" அருளால் மக்கள்பேறு பெறுகின்றனர். அதனால் இந்த விரதத்தை சுமங்கலிப் பெண்கள் எல்லோரும் விரும்பிப் அனுஷ்டிக்கின்றனர்.

கன்னிப் பெண்கள் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் செல்வச் சிறப்போடு வாழும் சிறந்த கணவன் கிடைக்கப் பெற்று சிறப்பானகுடும்ப வாழ்க்கை அமையப் பெறுவர் என ஆகமங்கள் கூறுகின்றன.

மகாலட்சுமியைத் தனலட்சுமி, தான்யலட்சுமி, தைரியலட்சுமி, ஜெயலட்சுமி, வீரலட்சுமி, சந்தானலட்சுமிட், கஜலட்சுமிட் , வித்யாலட்சுமிட் என அஷ்டலட்சுமிகளாகப் பிரித்துள்ளனர்.

லக்ஷ்மி தேவி எட்டுட் வகைச் செல்வங்களை வாரி வழங்குபவள் என்றும், பொறுமை மிக்கவள் என்றும் அவள் அனைவருக்கும் நன்மையே செய்வாள் என்றும் அதர்வணர் வேதத்தில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாகப் பெண்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் அவளால் பொறுத்துக் கொள்ள முடியாது. அவள் நித்திய சுமங்கலி. மஞ்சள் பட்டு உடுத்தி காட்சிட் தருபவள். கணவரான திருமாலின் மார்பில் குடியிருப்பவள். பெண்களுக்கே உரித்தான கருணை உள்ளம், அழகு, வெட்கம், அன்பு, புத்தி ஆகியவற்றுக்கு அதிபதியும் அவளே. வரலட்சுமி விரதம் இருந்து அவளைப் பூஜித்தால் எல்லாப் பலன்களும் கிடைக்கும் என ஆகமங்கள் கூறுகின்றன.

இந்த விரதம் அனுஷ்டிப்பதற்கு வீடு அல்லது







கோயில்களில் தென்கிழக்கு மூலையில் ஒரு சிறு மண்டபம் எழுப்ப வேண்டும். அதில் ஒரு பலகை இட்டு, வாழை இலை போட்டு அதில் ஒரு பிடி பச்சை அரிசி பரப்ப வேண்டும். ஒரு கும்பத்தை எடுத்துத் அதில் புனித நீர் நிறைத்துத், சந்தனம், குங்குமம் வைத்து மாவி லையுடன் தேங்காய் வைத்துத் அரிசியின் நடுவில் வைக்க வேண்டும். சந்தனத்தால் செய்யப்பட்ட வரலட் சுமியின் முகத்தைக் கலசத்தில் வைக்க வேண்டும். வசதி மிக்கவர்கள் வெள்ளி முகம் வைக்கலாம். சிலையை தாழம்பூவால் அலங்கரித்து, பின் ஐந்து வகையான ஆரத்தி தட்டுகளால் பூஜை செய்ய வேண்டும்.

அஷ்டலட்சுமிகளுக்கும் விருப்பமான அருகம்புல்லை சிலையின் மீது தூவி பூஜை செய்வது நல்லது. பூஜையின் போது அஷ்டலட்சுமி தோத்திரம், கனகதாரா தோத்திரம், மகாலட்சுமி தோத்திரம் ஆகியவற்றை படிக்கலாம். வீட்டுக்கு வந்திருக்கும் பெண்களுக்கு தேங்காய், மஞ்சள் கயிறு, குங்குமம் கொடுக்க வேண்டும். நைவேத்யமாக கொழுக்கட்டை படைக்கலாம். பின் கலசத்தை அரிசிப் பானையில் வைத்துவிட த் வேண்டும். இதனால் அன்ன பூரணியின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை .

சந்தனத்தில் செய்யப்பட்ட லட்சுமி வடிவங்களை மறுநாள் நீர்நிலையில் கரைத்துவிட வேண்டும்.

இந்த விரதம் இருப்பதால் மாங்கல்ய பாக்கியம் நிலைக்கும். செல்வ வளம் சேரும். மங்கள வாழ்க்கை அமையும். கன்னிப் பெண்களுக்கு திருமணம் நிச்ச யமாகும்.

சுமங்கலிப் பெண்கள் இந்த விரதத்தின்போது தாலிக் கயிற்றை வைத்துத் பூஜை செய்து, அதனை அணிந்து கொள்வார்கள். இதனால் அவர்கள் தீர்க்க சுமங்கலியாக இருப்பார்கள். இந்த வரலட்சுமி விரதத்தைக் கடைபிடிக்கும் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உயர்ந்த ஞானம் கிட்டும். சுமங்கலிப் பெண்களுக்கு மங்கள வாழ்க்கை அமையும். மாங்கல்ய பாக்கியம் நிலைத்து நீடிக்கும்.

குடும்பத்திற்கு எட்டுவித ஐஸ்வரியங்கள் உண்டாகும். இந்த விரதம் மேற்கொள்வோர் விரும்பிய நலன்கள் எல்லாம் கிட்டும்.

தனியாக வீட்டில் விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள் அருகாமையில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் வரலக்ஷ்மி பூசைககளில் கலந்தும் விரதம் அனுஷ் டிக்கலாம்.

உள்ளத் தூய்மையுடனும் உடல் தூய்மையுடனும் ஆசார சீலர்களாக அஷ்ட இலக்குமியாக விளங்கும் அம்பிகையை வழிபட்டாட்ல் அம்பிகையின்அருள் கிடைத்து மகிழ்ச்சியானவாழ்க்கை அமைந்துவிடும்.

# தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்







இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள 80 இந்திய கடற்றொழிலாளர்களையும் விடுவிக்கக் கோரி தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இந்திய மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் அதிகாலை 14 இந்திய கடற்றொழிலாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் அவர்களின் மீன்பிடிப் படகு மற்றும் ஒரு பதிவு செய்யப்படாத நாட்டுப்படகும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு கடற்றொழிலாளர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை முடிவுக்குக் கொண்டுவர மத்திய அரசு தூதரக ரீதியாக தலையிட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இதுபோன்ற கைது சம்பவங்கள் தொடர்வது மிகவும் கவலையளிப்பதாகவும் 2025 ஆம் ஆண்டில் மட்டும் நடைபெற்ற கைது சம்பவங்களில், இது 17 ஆவது சம்பவம் என்றும் தமிழக முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போது, 237 மீன்பிடிப் படகுகளும், 80 மீனவர்களும் இலங்கை அதிகாரிகளின் காவலில் இருப்பதால் மீனவர்களின் ஒரே வாழ்வாதாரமான பாரம்பரிய நீர்நிலைகளில் மீன்பிடிக்கும் உரிமையை இழந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, கைது செய்யப்பட்ட அனைத்து தமிழக கடற்றொழிலாளர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு மத்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரை வலியுறுத்துவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# பிரதமர் மோடியுடன் கமல்ஹாசன் சந்திப்பு



மாநிலங்களவை உறுப்பினராக சமீபத்தில் பொறுப்பேற்றுக்கொண்ட கமல்ஹாசன் நேற்று பிரதமர் மோடியை சந்தித்தார்.

இது குறித்து மநீம தலைவரும், நடிகருமான கமல்ஹாசன் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தமாக சந்தித்தேன். ஒரு கலைஞனாகவும், தமிழ்நாட்டின் பிரதிநிதியாகவும் அவரிடம் சில கோரிக்கைகளைத் தெரிவித்திருக்கிறேன். அவற்றுள் தலையாயது கீழடி.

தமிழின் தொன்மையை, தமிழ் நாகரிகத்தின் பெருமையை உலகிற்கு உரக்கச் சொல்லும் தமிழர்களின் முன்னெடுப்புகளுக்கு பிரதமர் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்." எனத் தெரிவித்துள்ளார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரான கமல்ஹாசன் மாநிலங்களவை உறுப்பினராக கடந்த ஜூலை 25 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். மநீம கட்சி கடந்த 2024 மக்களவைத் தேர்தல் முதல் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்தியாவுக்கு செல்கிறார்



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் விரைவில் இந்தியா வர உள்ளார் என்று இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் கூறியுள்ளார்.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் அஜித் தோவல், ஸ்புட்னிக் செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரஷ்யாவுடன் இந்தியாவுக்கு மிகச் சிறப்பான உறவு இருக்கிறது. இது ஒரு நீண்ட கால உறவு. இரு நாடுகளுக்கும் இடையிலான கூட்டாண்மையை நாங்கள் மிகவும் மதிக்கிறோம். இரு நாடுகளுக்கு இடையே உயர்மட்ட தொடர்புகள் உள்ளன. இந்தத் தொடர்புகள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி உள்ளன.

ரஷ்ய ஜனாதிபதி புடின் இந்தியாவுக்கு இந்த ஆண்டு வர இருப்பதை அறிந்து நாங்கள் மிகவும் மகிழ்ச்சியும் உற்சாகமும் அடைந்துள்ளோம். திகதிகள் கிட்டத்தட்ட இறுதி செய்யப்பட்டுவிட்டன என அறிகிறேன். மிக முக்கியமான விடயம் என்னவென்றால், உச்சி மாநாட்டுக் கூட்டங்கள் எப்போதும் திருப்புமுனையாக இருந்துள்ளன." எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு ஜூலை மாதம் ரஷ்யாவுக்குப் பயணம் மேற்கொண்டார். அப்போது, இரு நாடுகளுக்கு இடையேயான நீண்ட கால உறவு குறித்து இரு தலைவர்களும் பகிர்ந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ரஷ்யாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதால், இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 50 சதவீதம் வரி விதிக்க அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இந்தச் சூழலில் ரஷ்ய ஜனாதிபதி புடினின் இந்திய விஜயம் குறித்த தகவல் வெளியாகியிருப்பது கவனிக்கத்தக்கது.





# காசாவை ஐந்து மாதங்களிற்குள் முழுமையாக கைப்பற்ற திட்டம்

## இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அனுமதி

ஹமாசின் பிடியில் உள்ள பணயக் கைதிகளிற்கு உயிராபத்து ஏற்படலாம் என்ற இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகளின் எச்சரிக்கையை மீறி காசாவை முழுமையாக கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரவை அனுமதி வழங்கவுள்ளது என இஸ்ரேல் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் இஸ்ரேல் டைம்ஸ் மேலும் குறிப்பிடுகையில், 5 மாதங்களிற்குள் காசா முழுமையாக கைப்பற்றும் திட்டத்திற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கவுள்ளது.

இஸ்ரேலிய பிரதமரின் இந்த திட்டத்தினால் ஹமாசின் பிடியில் உள்ள பணயக்கைதிகளிற்கும் ஆபத்து ஏற்படும் உயர் இராணுவ அதிகாரிகள் எச்சரித்துள்ள போதிலும் மில்லியன் கணக்கான பாலஸ்தீனியர்களை இடம்பெயரச்செய்யக்கூடிய இந்த திட்டத்திற்கு இஸ்ரேல் இன்று அனுமதி வழங்கவுள்ளது என பல ஹீப்ரு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சமீபத்தைய பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ள நிலையில்,எஞ்சியுள்ள ஹமாசினை அழிப்பதும், பணயக்கைதிகளை விடுதலை செய்வதற்கான அழுத்தத்தை கொடுப்பதுமே இந்த திட்டத்தின் நோக்கம்

ஹமாசின் பிடியில் 20 பணயக்கைதிகள் உயிருடன் உள்ளனர் என இஸ்ரேல் கருதுகின்றது.

காசாவை முழுமையாக கைப்பற்றும் திட்டம் காசா நகரிலிருந்து ஆரம்பமாகி மத்திய காசா பள்ளத்தாக்கை நோக்கி நகரும்.

இதன்போது இந்த பகுதியில் உள்ள காசாவின் சனத்தொகையில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் மாவசி மனிதாபிமான வலயத்தை நோக்கி செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

சில அமைச்சர்கள் இந்த திட்டத்தை எதிர்க்கின்ற போதிலும் இந்த திட்டத்திற்கான ஆதரவு பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகுவிற்கு கிடைக்கும் பாதுகாப்பு அமைச்சரவையின் பெரும்பான்மை ஆதரவு அவருக்கு கிடைக்கும்.

சிறிய குழுவொன்று கடந்த மூன்று நாள்களாக இது குறித்த கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளது. இதன் போது காசா மீதான நீண்டகால நடவடிக்கைகளிற்கான பல திட்டங்களை இஸ்ரேலிய இராணுவத்தின் முப்படை பிரதானி லெப் ஜெனரல் எயால் சமீர் முன்வைத்துள்ளார்.

காசா நகரை முதலில் கைப்பற்றி அமெரிக்காவின் ஆதரவுடன் மனிதாபிமான பொருள்களை விநியோகிக்கும் நிலையங்களை விஸ்தரிக்கும் திட்டம் இஸ்ரேலிடம் உள்ளது.

இதனடிப்படையில் முதற்கட்டமாக காசா நகரில் உள்ள மக்களை வெளியேறுவதற்கான உத்தரவை இஸ்ரேல் பிறப்பிக்கும், இந்த நகரில் ஒரு மில்லியன் மக்கள் உள்ளனர்.

இஸ்ரேலின் இராணுவநடவடிக்கை நான்கைந்து மாதங்கள் நீடிக்கும் இஸ்ரேலிய இராணுவத்தின் நான்கு படைப்பிரிவுகளை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தவுள்ளனர்.

காசா நகரை கைப்பற்றுவதுடன், மத்திய காசாவில் உள்ள முகாம்களை நோக்கி செல்லும் திட்டம் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மக்கள் காசாவின் தென்பகுதி நோக்கி செல்லவேண்டிய நிலையேற்படும்.

பணயக்கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் பகுதிகளில் அவர்களின் உயிர்களிற்கு ஆபத்து ஏற்படாமல் மீட்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும்.

மேலும் அதிகளவு காசா மக்களை தென்மாவாசி நோக்கி நகர்த்துவதே இந்த இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என குறிப்பிடப்பட்டுள்ளது.









# 2,000 பாலஸ்தீனியர்களிற்கு தனித்தீவில் மருத்துவசிகிச்சை

## இந்தோனேசியா அறிவிப்பு

காசாவில் உள்ள 2000 நோயாளிகள் மற்றும் காயமடைந்தவர்களிற்கு தனித்தீவொன்றில் வைத்து சிகிச்சையளிக்கவுள்ளதாக இந்தோனேசியா தெரிவித்துள்ளது.

2023 ஒக்டோபர் ஏழாம் திகதி முதல் காசாவிற்கு மனிதாபிமான உதவிகளை வழங்கிவரும் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடான இந்தோனேசியா, மக்கள் வசிக்காத கலாங் தீவில் உள்ள மருத்துநிலையமொன்றை பாலஸ்தீனியர்களிற்கு சிகிச்சை வழங்குவதற்காக திருத்தவுள்ளதாக தெரிவித்துள்ளது.

யுத்தத்தினால் காயமடைந்த இடிபாடுகளின் கீழ் சிக்குண்டு காயமடைந்த 2000 பாலஸ்தீனியர்களிற்கு இந்தோனேசியாமருத்துவசிகிச்சையை வழங்கும் என அந்த நாட்டு ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆனால் இது காசாவிலிருந்து பாலஸ்தீனியர்களை வெளியேற்றும் முயற்சியில்லை என தெரிவித்துள்ள அவர், மருத்துவசிகிச்சை முடிந்து காயங்கள் ஆறியதும் அவர்கள் மீண்டும் காசா திரும்புவார்கள் என தெரிவித்துள்ளார்.





# காசாவில் பட்டினி காரணமாக அதிகரிக்கும் உயிரிழப்புக்கள்

காசாவில் பட்டினியால் மரணித்தோரின் எண்ணிக்கை 193 ஆக அதிகரித்துள்ளது. இதன்படி, கடந்த 24 மணி நேரத்தில் 5 பேர் பட்டினியால் மரணித்துள்ளனர் என காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், காசா முழுவதும் நேற்று இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் 135 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதலில் 771 பேர் காயமடைந்துள்ளனர் என காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, காசா மீதான இஸ்ரேலின் போரில் இதுவரை சுமார் 61,158 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மியன்மாரின் ஜனாதிபதி மைன்ட் ஸ்வே காலமானார்

2021 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் பதவிக்கு வந்த மியன்மாரின் ஜனாதிபதியான மைன்ட் ஸ்வே காலமானார் என அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

உடல்நல குறைவால் மருத்துவ ஓய்வில் ஒரு வருடம் காலம் இருந்த நிலையில், நேற்று காலை அவர் உயிரிழந்துள்ளார். அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது.

74 வயதான மைன்ட் ஸ்வே தலைநகர் நேபிடாவில் உள்ள வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளதுடன், அவரின் இறுதிச் சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என இராணுவம் தெரிவித்துள்ளது.



# இன்றைய ராசி பலன்கள் -08.08.2025


மேஷம்

உங்கள் மனதில் உணர்ச்சி பூர்வமான எண்ணங்கள் ஓடும். உங்களிடம் காணப்படும் பதற்றம் உங்கள் பேச்சில் வெளிப்படும். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மேற்கொள்வதன் மூலம் உங்கள் பதற்றத்தைக் குறைக்கலாம்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். கூடுதல் பணிகள் உங்களுக்கு சுமையாக தெரியும். உங்களை நிரூபிக்க நீங்கள் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ள வேண்டும்.

உங்கள் துணையிடம் அகந்தை போக்கை காண்பிப்பீர்கள். உறவில் மகிழ்ச்சியும் அமைதியும் ஏற்பட நட்பான அணுகுமுறை மற்றும் மனம் திறந்த பேச்சு அவசியம்.

அதிக பொறுப்புகள் காரணமாக தேவையற்ற செலவுகள் ஏற்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

மூட்டுகள் மட்டும் தோள்களில் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இன்று சிறிது பதற்றமாக இருப்பீர்கள். தியானம் மேற்கொள்வதன் மூலம் குணம் பெறலாம்.


ரிஷபம்

இன்று உங்களுக்கு சாதகமான நாளாக இருக்கும். உங்களின் திறமை மூலம் இன்று முன்னேற்றகரமான பலன்கள் காண்பீர்கள். நீண்ட கால திட்டம் அமைக்க இந்த நாளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆன்மீக ஈடுபாடு சிறந்த பலனைத் தரும்.

இன்று பணியில் உங்கள் திறமையை வெளிப்படுத்தும் நாள். இன்று அபாரமான திறமையை வெளிபடுத்துவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.

இன்று அன்பிற்கும் காதலுக்கும் உரிய நாள். உங்கள் நகைச்சுவை மற்றும் காதல் உணர்வு மூலம் உங்கள் பிரியமானவரை மகிழ்விப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி காணப்படும். உங்கள் நிதி மற்றும் பயனுள்ள முதலீடு பற்றி இன்று விரைந்து முடிவெடுப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆற்றலும் தன்னம்பிக்கையும் நிறைந்து காணப்படும்.


மிதுனம்

இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உற்சாகம் காரணமாக சுய முனேற்றப் பாதையில் செல்வீர்கள். இன்று அனைத்துவிதத்திலும் சிறப்பான நாள்.

பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.பணியில் உங்கள் கூடுதல் திறமைகளை மேம்படுத்துவீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் அமைதியான கட்டுப்பாடான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதன் மூலம் நீங்கள் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு ஊக்கத் தொகை மற்றும் சலுகைகள் பெறுவீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் மிகுந்த மன ஆற்றல் காரணமாக இன்று முழுவதும் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.


கடகம்

இன்று சிறிது மந்தமாக காணப்படுவீர்கள். எனவே அதனை மாற்றி துடிப்புடன் செயல்பட வேண்டும். நேர் மறையான கண்ணோட்டம் கொள்ளுங்கள்.

உங்கள் பணிகளை திறமையாக ஆற்றுவதில் சில தடைகளை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடனான தொடர்பு அனுகூலமாக இருக்காது.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனை தவிர்த்து நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள்.

இன்று ஏற்படும் அதிக செலவுகள் தவிர்க்க முடியாதது. எனவே செலவுகளை கட்டுபடுத்துங்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.முதுகு வலி மற்றும் இருமல் போன்ற பாதிப்புகள் காணப்படும்.


சிம்மம்

உங்கள் தவறுகளை நீங்கள் திருத்திக் கொள்ள வேண்டும். உங்கள் செயல்களில் கட்டுப்பாடு வேண்டும்.உங்கள் செயல்களை முறைப்படுத்தி ஆற்றுவதன் மூலம் இழப்பு ஏற்படாமல் இருக்கும்.

நீங்கள் பொறுமையுடனும் உறுதியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். நீங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது.

உங்கள் துணையிடம் சிறிய விஷயங்களைக் கூட பெரிதாக எடுத்துக் கொள்வீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். நீங்கள் திட்டமிட்டு பணத்தை செலவு செய்ய வேண்டும்.தேவையற்ற கவலை மற்றும் தோல் எரிச்சல் காரணமாக நீங்கள் முந்தைய இரவு தூக்கமின்மையால் பாதிக்கப்பட்டிருப்பீர்கள்.


கன்னி

இன்று துடிப்பான முன்னேற்றகரமான நாளாக இருக்கும். நீங்கள் உங்களை முன்னேற்றிக் கொள்வதில் முனைவீர்கள். இன்று உங்களுக்கென சிறப்பம்சத்தை உருவாக்குவீர்கள்.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு காணப்படும். சரியான நேரத்தில் அவர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். அதன் காரணமாக முன்னேற்றம் அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். இருவருக்கிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும். இருவரும் பொருத்தமான ஜோடியாக இருப்பீர்கள்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படுவதால் சிறப்பான நாளாக இருக்கும். இந்தப் பணம் ஊக்கத்தொகை அல்லது சலுகை வகையில் கிடைக்கும்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் தைரியம் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும். இன்று முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள்.


துலாம்

இன்று சோதனையான நாளாக இருக்கும். எதைப்பற்றியும் கவலையின்றி அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

பணியிடத்தில் ஆதாயம் கிடைப்பது கடினம். சிறிய செயல்களை முடிக்க கடுமையான முயற்சி தேவைப்படும். சக பணியாளர்களுடனான உறவு நல்லுறவாக இருக்காது.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இது முற்றிலும் தேவையற்றது. எனவே நட்பான அணுகுமுறையோடு அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பொறுப்புகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகள் அதிகமாக இருக்கும். எனவே செலவுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று முதுகுவலி வாட்டும். பதற்றமும் குழப்பமும் காணப்படும்.


விருச்சிகம்

ஆன்மீக விழிப்புணர்வும் ஈடுபாடும் மகிழ்ச்சி அளிக்கும். இன்று அனுபவத்தின் மூலம் பாடம் கற்க நேரலாம்.

பணி வளர்ச்சி சராசரியைவிட சற்று கூடுதலாக இருக்கும். இன்று அதிக பணிகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிபுணர்களின் ஆலோசனை பெறுங்கள்.

உறவுப் பிணைப்பு வலுவற்றதாக இருக்கும். மகிழ்ச்சியாக இருக்க நட்பான அங்குமுறை மேற்கொள்வது சிறந்தது.

இன்று நிதி நிலையில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். அதன் வேகத்தில் நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். எனவே திட்டமிட்டு செயல்படுங்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால் வலி மற்றும் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. அமைதியான அணுகுமுறை மேற்கொள்ளவும்.

# இன்றைய ராசி பலன்கள் -08.08.2025


தனுசு

முக்கியமான முடிவுகளை வேறு நாளைக்குத் தள்ளிப் போடுங்கள். இன்று தைரியம் குறைந்து காணப்படும். உங்கள் உணர்ச்சியுடன் போராடி உங்கள் சுய முன்னேற்றத்துக்கு முயல வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் ஏற்படும். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்கள் நண்பர் இல்ல விழாவுக்குச் செல்லத் திட்டமிடிருப்பீர்கள். பதற்றமான சூழ்நிலை ஏற்படும் என்பதால் அதனை தவிர்த்தல் நல்லது.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்காது. ஏற்ற இறக்கத்துடன் காணப்படும்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படலாம். வறுத்த மற்றும் கார உணவுகளை தவிர்த்தல் நல்லது.


கும்பம்

இன்றைய நாள் உங்களுக்கு சாத கமாக இருக்கும். முக்கிய முடிவுகள் இன்று உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

பணியிடத்தில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். எந்தச் சவால்களையும் நீங்கள் எளிதில் சமாளிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்வீர்கள். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். கடின உழைப்பிற்கு ஊக்கத் தொகை கிடைக்கும். உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் ஆற்றல் மற்றும் உறுதி காரணமாக நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை பராமரிபீர்கள்.


மகரம்


இன்று மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பீர்கள். உங்கள் மகிழ்ச்சி உங்கள் செயல்களில் வெளிப்படும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இன்னும் மகிழ்ச்சியாக இருக்க இயலும்.

உங்கள் தனித்த திறமை மூலம் நீங்கள் சிறப்பாக பணியாற்றுவீர்கள். பணியில் வெற்றி பெற வேண்டுமென்ற உறுதி உங்கள் அணுகுமுறையில் காணப்படும்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை உண்மையுடன் பகிர்ந்து கொள்வீர்கள். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று நிதிநிலை சிறப்பாக இருக்கும். ஸ்திரமான நிதிநிலை ஏற்படுத்த உங்களுக்கு வளர்ச்சி ஏற்படுத்தும் வகையிலான சேமிப்பு திட்டத்தில் கலந்து கொள்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் தைரியமாகவும் உறுதியுடனும் காணப்படுவீர்கள்.


மீனம்

இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சி குறைந்து காணப்படும். யதார்த்தமான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பணிகளைத் திட்டமிட்டு ஒழுங்கமைத்து மேற்கொள்ள வேண்டும். சக பணியாளர்களுடன் கருத்து வேற்றுமை காணப்படும்.

உணர்ச்சி பூர்வமாக நடந்து கொள்வதன் மூலம் பிரச்சினை ஏற்படலாம். நல்லுறவு ஏற்பட இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

நிதிநிலை இன்று மகிழ்சிகரமாக இருக்காது. உங்கள் நிதிநிலையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் அசௌகரியம் காரணமாக இன்று உங்களுக்கு முட்டி வலி பாதிப்பு ஏற்படும்.

# ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் முதல் சர்வதேச மாநாடு 11,12,13 இல்!

## யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் புதிய துறையாக உருவாகியிருக்கும் ஆங்கில மொழி கற்பித்தல் துறை தனது முதலாவது சர்வதேச மாநாட்டை எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடத்த உள்ளது.

அமெரிக்காவின் பென்சில்வேனியா பல்கலைக்கழகம், நியூஸ்லாந்து ஒக்லாண்ட் பல்கலைக்கழகம், லண்டன் பல்கலைக்கழகம், ஹொங்கொங் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகம் ஆகியவற்றில் இருந்து வருகைதரும் பேராசிரியர்கள் இம்மாநாட்டில் ஆதார சுருதி உரைகளையும் பேருரைகளையும் ஆற்றவுள்ளனர்.

'ஆங்கிலத்தின் காலனிய நீக்கம்' பற்றியதான கருப்பொருளில் நடாத்தப்படும் இம்மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்பித்தல் பிரிவின் முன்னாள் தலைவராக இருந்தவரும் தற்போது பென்சில்வேனியா பல்கலைக்கழகப் பேராசிரியராக பணியாற்றுபவருமான கலாநிதி சுரேஸ் கனகராஜாவின் ஒழுங்கமைப்பு வழிகாட்டலில் நடைபெறவுள்ளது. துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையிலும், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் மற்றும் ஆங்கில மொழி கற்பித்தல் துறைத் தலைவர் கலாநிதி கி. சண்முகநாதன் ஆகியோரின் இணைத் தலைமையிலும் ஒழுங்கமைக்கப்பட்ட இம்மாநாட்டில் மொத்தம் 96 ஆய்வுக்கட்டுரைகள் பல்வேறு நாட்டு ஆய்வாளர்களாலும் சமர்ப்பிக்கப் படவுள்ளன.

ஆங்கிலத் துறை சார்ந்த ஆர்வலர்கள், ஆசிரியர்கள், மாணவர்களை 11.08.2025 அன்று காலை 8.30 மணி முதல் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் இம்மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் கந்தையா சிறிகணேசன் அழைப்புவிடுத்துள்ளார்.